கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 28-04-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-04-28 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-04-29 | 2023-04-30 | 2023-05-01 | 2023-05-02 | 2023-05-03 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 4.0 | 12.0 | 8.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 36.0 | 36.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 28.0 | 29.0 | 29.0 | 28.0 | 28.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4 | 6 | 6 | 6 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 160 | 180 | 160 | 180 | 180 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 8 | 7 | 8 | 8 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

மே- 01, 02, 03-ஆகிய தேதிகளில் லேசான முதல் மிதமான மழைப்பொழிவு எதிர்பார்க்கலாம்; காற்றின் வேகம் மணிக்கு சுமார் 4.0-8.0 கி.மீ என்றளவில் வீசக் கூடும்; காற்றின் திசையானது தென்கிழக்கு முதல் தெற்கு நோக்கி வீசக்கூடும்; அதிகபட்ச வெப்பநிலை முறையே 35.0°C-36.0°C-ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 28.0°C-29.0°C-ஆகவும் எதிர் பார்க்கலாம்; காற்றின் ஒப்புமை ஈரப்பதம் முறையே 40-80%-ஆகவும் காணப்படலாம்.

### பொது ஆலோசனை:

03.05.2023 முதல் 09.05.2023 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவானது எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையினை விட அதிகமாகவும் மற்றும் அதிகபட்ச வெப்பநிலையானது எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையை விட சற்று குறைவாகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலையானது எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையில் பதிவாகக் கூடும்.

### குறுஞ்செய்தி :

முதிர்ச்சியடைந்த மற்றும் மற்றும் அறுவடைக்கு தயார் நிலையிலுள்ள பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

### பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | வேர் தூர் கட்டுதல் நிலை - 1. தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 2.இலைக் கருகல் நோய்- நடவுக்கு மேற்கொண்ட 30 & 45 நாட்களுக்குள் இந்நோயின் அறிகுறி தென்பட்டால் ஏக்கருக்கு இரண்டு முறை காப்பர் ஹைட்ராக்ஸிட் 77 WP 500 கிலோ கிராம் வீதம் அல்லது ஏக்கருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்ளின் கலவை @ 300 கிராம் + காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 500 கிராம் கலவையினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் மேலும் தேவைக்கேற்ப 15 நாட்கள் இடைவெளியில் மறு தெளிப்பினை மேற்கொள்ளலாம். |
| உளுந்து | 1.மஞ்சள் தேமல் நோய் - ஏக்கருக்கு 5 முதல் 6 மஞ்சள் வண்ண ஒட்டும் பொறியினை அமைக்கலாம்; நோய் தாக்கப்பட்ட பயிரினை களைந்து அழிக்கவும்; இலை வழி தெளிப்பாக நொச்சியிலை சாறு 10 சதம் அல்லது வேம்பிலை சாறு 5 சதம் 30 நாட்கள் விதைப்பிற்குபின் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம்; 2.அசுவினி- ஏக்கருக்கு மெத்தில் டெமெக்டோன் 25% EC 200 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு டைமெத்தியேட் 30% EC 200 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| மல்லி கை | மொட்டுப்புழு - குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5 SC @ ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மில்லி லிட்டர் வீதம் அல்லது நவலூரான் 10 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3.0 மில்லி லிட்டர் வீதம் தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | 1.இலைப்பேன்- இமிடகிலோபிரிட் 17.8% SL 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது பைப்ரோனில் 5% SC 0.6 1 லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 2.காய்ப்புழு- குளோரன்ட்ரானிலிப்ரோல் 18.5 SC 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம் அல்லது சியான்ட்ரானிலிப்ரோல் 10.26 OD 1 லிட்டர் தண்ணீருக்கு 1.8 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம் மற்றும் ஹெலிகோவர்பா ஆர்மிகெரா அல்லது ஸ்போடோப்டெரா லிட்டுரா இனக்கவர்ச்சிப் பொறி ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைக்கவேண்டும். |
| கத்திரிக்காய் | காய்த் துளைப்பான்-வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது டைமெத்தோயேட் 30 % EC 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்.மற்றும் ப்ரைஸ்டோமரஸ் டெஸ்டுசியஸ் மற்றும் செராமஸ்டஸ் பெலவோரிப்டெலில் ஒட்டுண்ணியைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். |
| மாம்பழம் | மாமரம்- ஆந்த்ராக்னோஸ்- நோய் அறிகுறி கண்டவுடன் காப்பர் ஆக்சி குளோரைடு ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.4 கிராம் என்ற வீதம் தெளிக்கலாம். |